தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை.

புதன்கிழமை, 1982 மார்ச், 3.

மாசி 19, துன்மதி, திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்

திட்டங்களைச் செயல்படுத்தும் முறைகளை அறிந்து இருந்தாலும், இன்றைய உலகப் போக்கினைப் புரிந்துகொண்டு அதற்கேற்ற வகையில் செயல்படுவதே நல்லது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

வியாபாரக் கடைகளில் விலைப் பட்டியல்களை வைக்கும் திட்டம்.

* வினா எண். 321—திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள வியாபாரக் கடைகளில் விலைப் பட்டியல் வைப்பது இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) விலைப்பட்டியல் வைத்து வியாபாரிகள் அரசு குறிப்பிட்ட விலையில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ;

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தமிழ்நாடு அட்டவணைப் பொருட்கள் (இருப்பு பற்றிய அறிவிப்பு, விலைகள் மற்றும் கணக்குகள் பராமரித்தல்) ஆணை, 1977-ன் படி இன்றி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

யமையாப் பண்டங்களின் விலைப்பட்டியல்களை வணிகர்கள் தங்கள் கடைகளில் வைக்க வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இந்த ஆணையைத்தீவிரமாக அமல்படுத்த வேண்டும் என்று அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) கோதுமைப் பொருட்களான மைதா, ரவை, மண்ணெண்ணெய் மற்றும் சிமென்ட் ஆகியவற்றுக்கு மட்டும்தான் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதர இன்றியமையாப் பொருட்களுக்கு விலைக்கட்டுப்பாடு கிடையாது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சோரணம் : தலைவர் அவர்களே, பல இடங்களிலே இன்று அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் எழுதி வைக்கப்படாமல் இருக்கிறதே, அப்படிப்பட்ட கடைக்காரர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து இருக்கிறதா? அப்படி எடுத்து இருந்தால், இதுவரையில் எத்தனை கடைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வட்ட வழங்கு அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இதற்கான நடவடிக்கைகளை அவ்வப்போது எடுத்து வருகிறார்கள். 1980 ஆம் ஆண்டில் 465 வழக்குகள் போடப்பட்டன. அவற்றில் 225 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டன. 67 வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன. ஒருவர் இறந்து விட்டார். மீதி வழக்குகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. 1981 ஆம் ஆண்டில் 179 வழக்குகள் தொடரப்பட்டன. 57 வழக்குகளில் தண்டனை கொடுக்கப்பட்டன. 27 வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன. 95 வழக்குகள் நீதிமன்றங்களில் உள்ளன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விலைப் பட்டியல் வைக்க வேண்டும் என்று விதி இருந்தாலும் கூட அது பல இடங்களில் முறையாகப் பின்பற்றப்படுவது இல்லை. அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது. விலைப் பட்டியல் போடுகின்ற நேரத்தில் கூட அந்த விலைகள் நியாயமான லாபத்திற்கு உட்பட்டு இருக்கிறதா என்று பார்க்கப்படுகிறதா? ஸ்டாக் வைத்திருப்பது சரியாக இருக்கிறதா என்று பார்க்கப்படுகிறதா? அரசால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஆங்காங்கு இருக்கின்ற அதிகாரிகள் கடைகளிலே இந்த விலைப் பட்டியல்கள் வைக்கின்றார்களா என்பதைப் பார்த்து வருகிறார்கள். 37 அத்தியாவசியப்பண்டங்களுக்கு

1982 மார்ச் 3]

விலைப் பட்டியல் வைக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். இருப்புக் கணக்குகளும் அவர்கள் பட்டியலில் எழுதி வைக்க வேண்டும். விலைப்பட்டியலில் விலைகளும் குறிக்கப்பட வேண்டும். விலை அதிகமாக இருக்கிறதா அல்லது இருப்பு நிலைமையைச்சரியாகப் புலப்படுத்தியிருக்கிறார்களா என்பதைப் பார்த்து, அந்த வகையில் தவறு இருந்தால் வழக்குத் தொடரலாம். அந்த வகையில்தான் அவர்கள் வழக்குகளை நான் முன்பு தெரிவித்த மாதிரி தொடர்ந்து இருக்கிறார்கள். மேலும், வட்ட வழங்கல் அதிகாரிகள் அதைப் பற்றி ஆராய்ந்து பார்த்து, அவ்வப்போது நடவடிக்கை எடுக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் கண்காணித்து வருகிறார்கள். அதைப் பற்றி குடிமைப் பொருள் வழங்கல் புலனாய்வுத் துறை இவற்றைக் கண்காணித்து வருகிறார்கள். மாதம் ஒரு முறை இது பற்றிய தகவல்களையும், தன்மீது எடுத்த நடவடிக்கைகள் பற்றியும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வட்ட வழங்கல் அதிகாரி அறிக்கை அனுப்பிவைக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டு இருக்கிறது.

திரு. செ. செம்மலை: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அத்தியாவசியப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்துள்ளதாகச் சொன்னார்கள். அப்படிப்பட்ட முறையில் அத்தியாவசியப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டு இருந்தாலும், கொள்ளை லாபம் அடிக்க நினைக்கும் வியாபாரிகள் அப்படிப்பட்ட பொருள்களை விற்பனை செய்கின்ற நேரத்தில் அளவு குறைவாகக் கொடுத்து வியாபாரம் செய்வதாக அரசுக்கு ஏதேனும் புகார்கள் வந்துள்ளதா? அதைத் தவிர்க்க பாலிதின் போன்ற பைகளில் அந்த அத்தியாவசியப் பொருள்கள் பேக் செய்து விற்கப்பட வேண்டும் என்று அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அளவுகள் சரியாக இருக்கின்றனவா என்று கண்காணிக்கப்பட்டு வருகின்றன. கடைகளில் பயன்படுத்தப்படுகிற அளவுகள், படிகள் மற்றும் அளவைக் கருவிகள் ஆகியவற்றை அவ்வப்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பரிசோதிக்கின்றனர். அதிலே ஏதாவது மோசடியோ அல்லது ஏமாற்றமோ செய்யப்பட்டு இருக்குமானால், அது குறித்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. சில கடைகளில் பாலிதின் பைகளில் குறிப்பிட்ட பொருள்களைப் பேக் செய்து விற்கின்றனர். ஆகவே, எல்லோரும் பாலிதின் பைகளில் போட்டு விற்க வேண்டும் என்று உத்தரவிடுவதற்கு இல்லை.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, இந்த விலைப் பட்டியல் வைக்காமல் அல்லது அதிக விலைக்கு விற்கக் கூடியவர்களை, 'பிளாக் மார்க்கெட்டில்' விற்கக்கூடியவர்களை,

அந்த வியாபாரிகளை 'பிளாக் லிஸ்டில்' போட்டு, அவர்களைப் பற்றி பத்திரிகைகளிலும் ரேடியோவிலும் அம்பலப்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 'பிளாக் லிஸ்ட்' என்று கொண்டுவந்து பட்டியல்போட்டு பத்திரிகைகளில் அறிவிக்கும் நடைமுறை கையாளப்படவில்லை. ஆனால், இது சம்பந்தமான வழக்குகள் நடைபெறும்போதும் தண்டனை அளிக்கும்போதும் அந்த விவரங்கள் பத்திரிகைகளில் வருகின்றன. யார், யார் என்னென்ன குற்றங்கள் செய்தார்கள் என்றும், என்னென்ன தண்டனைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன என்றும் மக்கள் அறிந்து கொள்வதற்காகவும் அவர்களைப்பற்றி மக்கள் புரிந்துகொள்வதற்காகவும் பத்திரிகைகளில் வெளியிடுகிறார்கள்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : தலைவரவர்களே, இப்போது கடைகளிலே விலைப்பட்டியல் வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஓட்டல்களிலும் ஒவ்வொரு ஓட்டலிலும் ஒரே பலகாரத்திற்கு ஒவ்வொருமாதிரியான விலை வைத்து விற்கிறார்கள்; ஓட்டல்களில் விலைப்பட்டியல் வைக்காததுதான் இதற்குக் காரணம். ஆகவே, எல்லா ஓட்டல்களிலும் பலகாரங்களின் விலைப் பட்டியலை வைக்க வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஓட்டல்களிலே கட்டாயமாக விலைப்பட்டியல் வைக்க வேண்டுமா என்பது பற்றிய குறிப்பு தற்போது என்னிடம் இல்லை. அப்படி இருக்குமானால் அதைக் கண்காணிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இராஜபாளையத்தில் கைப்பற்றப்பட்ட மண்ணெண்ணெய்.

* வினா எண் 322—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 27—12—1980 தேதி இராஜபாளையத்தில் பதுக்கி வைக்கப்பட்டு இருந்த சுமார் 38,000 லிட்டர் மண்ணெண்ணெய் தனியார் கடைகளிலிருந்து சிவில் சப்ளை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் சம்பந்தப்பட்டவர்களின் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS